Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -11 28-10-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 252

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்.
கணினி முறை வீடியோ மிக்சிங்.
பாடல் பதிவுகள்.
அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi.
யாழ் சாலை, (சி-8628) கிளிநொச்சி.

-சிறிலங்காப் படையினரின்-

## பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை கண்டித்து மன்னாரில் பேரணி

கடந்த 18ஆம் திகதி மன்னார் உயிலங்குளம் பகுதியில் இடம்பெற்ற பாலியல்வல்லுறவைக் கண்டிக்கும் வகையில் நேற்று மன்னாரில் கண்டனப்பேரணியொன்று நடைபெற்றுள்ளது. காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இப்பேரணி 11.30 மணி வரை நடைபெற்றது. பேரணியில் கலந்து கொண்டோர் உயிலங்குளம் சிறிலங்காப் பொலிஸ் காவலரணுக்கு முன்பாக வீதித் தடைகளை ஏற்படுத்தி கொழும்பு, வவுனியா, மன்னார் போன்ற இடங்களிலிருந்து வந்த பேருந்துகளை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அப்போராட்டத்தின்போது நான்கு கோரிக்கைகள் சிங்களத்திலும், தமிழிலும் முன்வைக்கப்பட்டன. அதில், "இராணுவமே எமது பிரதேசத்தை விட்டு வெளியேறு" "பெண்களைப் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் இருப்பதற்கேற்ற வழி செய்" "பாலியல் வல்லுறவில் ஈடுபட்டோரை இனம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனை வழங்கு" "மன்னார் மாவட்டத்தில் மக்கள் குடியிருப்பில் உள்ள இராணுவத்தை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவில்படைத்தளத்தில சிப்பாய் ஒருவர் மரணம்

சாவகச்சேரியின் நுணாவில் பகுதியில் உள்ள படைத்தளமொன்றில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படைச்சிப்பாய் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அனுராதபுர மாவட்டம் மகாவிலாச்சியாப் பகுதியைச் சேர்ந்த டிங்கிரிபண்டா புஸ்பகுமார (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

நுணாவில் பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தின் 52-1 படைப்பிரிவின் தளத்தில் நேற்றுக்காலை பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் இவர் மயக்கமுற்று விழுந்து உயிரிழந்ததாக படைத்தரப்பால் சாவகச்சேரி நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சாவகச்சேரி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரி எரிக்றோகிதவின் நெறிப்படுத்தலில் சாவகச்சேரி நீதிமன்றபதில் நீதவான் எஸ்.பாலகிருஸ்ணன் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து மரணவிசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

சடலத்தை கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியிடம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# முப்படையினரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்

# சனாதிபதிக்கா? பாதுகாப்பு அமைச்சருக்கா?

## சனாதிபதியின் முறையீடு குறித்து விசாரிக்க சிறிலங்கா உயர் நீதிமன்றம் குழு நியமிப்பு

**முப்படையினரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் சனாதிபதிக்கா?பாதுகாப்பு அமைச்சருக்கா? என்பது குறித்து சனாதிபதி சமர்ப்பித்திருந்த மனு தொடர்பில் விசாரணை மேற்கொள்ள, ஐந்து பேரடங்கிய நீதியரசர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் சரத். என். சில்வா இந்தக் குழுவை அமைத்துள்ளார்.**

முப்படையினரையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட தமக்கா அல்லது பாதுகாப்பு அமைசசருக்கா இருக்கிறது? எனக்கேள்வி எழுப்பி சனா திபதியினால் மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்த மனுவை விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஐந்து பேரடங்கிய நீதியரசர்கள் குழு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது அறிக்கையை பிரதம நீதியரசருக்கு சமர்ப்பிக்கும். இதனையடுத்து பிரதம நீதியரசர் தமது தீர்ப்பை அடுத்து வரும் 10 நாட்களுக்குள் வழங்குவார். அரசியலமைப்பின் 129 பந்தி முதலாம் பிரிவுக்கு அமையவே பிரதம நீதியரசரால் நீதிரசர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்கு பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள இரு அரச வர்த்தமானி அறிவித்தல்கள் காரணமாகும். கடந்த ஆண்டு வெளியான வர்த்தமானி ஒன்றில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கன்னியர்மடம் பாடசாலை வகுப்பறையினுள் கைக்குண்டு

### அச்சத்தால் மாணவிகள் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கன்னியர் மடம் வித்தியாலய வகுப்பறை ஒன்றில் கைக்குண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்ததால் நேற்றுக்காலை பாடசாலை வகுப்பறைக்குச் சென்ற மாணவிகள் பீதியடைந்து வகுப்பறையைவிட்டு உடனடியாக வெளியேறியிருந்தனர்.

இவ்வித்தியாலயத்தில் 2005ஆம் ஆண்டு கலைப்பிரிவு வகுப்பறை ஒன்றிலேயே இந்தக் கைக்குண்டு வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து அப்பாடசாலை அதிபர் அருகிலுள்ள சிறிலங்காப் படைத்தரப்பினரிடம் அறிவித்து அதை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக மாணவர்கள் கருத்துத் தெரிவித்தபோது பாடசாலைக்கு மிக அருகாமையில் சிறிலங்கா இராணுவத்தின் காவலரண்களும் முகாமுமே இருக்கின்றன எனவும் நேற்று முன்தினம்பாடசாலை விடுமுறை என்பதால் அருகிலுள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்த சங்கரி தொடர்பாக ஆராய அம்பாறையில் கூட்டணிக்கூட்டம்

அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியை தலைவர் பதவியில் இருந்து இடைநிறுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

அம்பாறை மாவட்டத், திலுள்ள பிரதேச மட்ட ஆதரவாளர்கள், முக்கிய உறுப்பினர்கள் கட்சித் தொண்டர்கள்எனச் சுமார் 497

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலவ்சன் தொடர்பான விவகாரம் நோர்வே வெளிவிவகார அமைச்சிடம்

### நோர்வேப் பிரதமர் சந்திரிகாவிற்கு அறிவிப்பு

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சனை மீள அழைப்பது தொடர்பாக நோர்வே பிரதமர் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சுக்கு உத்தரவு வழங்கியிருப்பதாக சிறிலங்கா சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முல்லைத்தீவு கப்பல் சம்பவம் தொடர்பில் சனாதிபதியினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரெலவ்சனை மீள அழைக்குமாறு சனாதிபதி நோர்வேப் பிரதமர் பொண்டவிக்கிற்கு கடந்த 23ஆம் திகதி கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதற்கு 24ஆம் திகதி பொண்டவிக் பதில் அனுப்பி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கடினமாக்க நடவடிக்கை

(லண்டன்)

பிரிட்டிஷ் அரசாங்கம் வெளிநாட்டவர் தஞ்சம் பெறும் வழிமுறையை மேலும் கடுமையானதாக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நம்பத்தகுந்த விளக்கம் என்று அரசு கூறும் விளக்கம் இல்லாமல் பயண ஆவணங்கள் இன்றி பிரிட்டனுக்குள் வந்து தஞ்சம் கோருவோர்மீது வழக்குத் தொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தஞ்சம் கோருவோரின் கோரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாக்தாத் செஞ்சிலுவை தலைமை அலுவலகம் மீதும் பொலிஸ் நிலையங்கள் மீதும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

### அமெரிக்கப்படையினர், செஞ்சிலுவை உறுப்பினர்கள் உட்பட 45 பேர்பலி

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமைக் காரியாலயம் மீதும் அதனருகேயுள்ள நான்கு பொலிஸ் நிலையங்கள் மீதும் ஒரே நேரத்தில் நேற்று தற்கொலைத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத்தாக்குதல்களில் அமெரிக்கப்பொலிசார், அமெரிக்க இராணுவத்தினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர். உள்ளிட்ட 45பேர் கொல்லப்பட்டுள்ளனர். 224பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்ட பொதுமக்களில் இருசிறுவர்களும் 19பெண்களும் அடங்கியுள்ளனர்.

இத்தாக்குதலின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூன்று மாடிக்கட்டடம் பலத்த சேதமடைந்துள்ளதோடு அந்த காரியாலய வளவிற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 12 கார்களும் சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதல் குறித்து கருத்துக்கூறிய அமெரிக்க இராணுவ அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் மாக்கேட்லிஸ் தாக்குதலானர்

(8 ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

### அறிவமுது பொத்தகசாலை

கல்விப்பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை-2004 ஏப்ரல் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப்படிவம் விலை-10/= பெற்றுக்கொள்ளவேண்டிய இடம் அறிவமுது பொத்தகசாலை-கிளிநொச்சி. (3126)


## ரிரோன் பர்னாண்டோ வியட்நாம் விஜயம்

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பர்னான்டோ வியட்நாமிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டு அங்கு சென்றுள்ளஅவர் வியட்நாமிய பிரதமர் ஜனாதிபதி ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் இரு பகுதிகளில் தொல் பொருட்கள் பல கண்டுபிடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கின் இரு வேறு பகுதிகளில் இருந்து சுமார் 2500 ஆண்டுகள், 250 ஆண்டுகள் தொன்மையான தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


கடந்த சனிக்கிழமை கட்டைக்காட்டு, முள்ளியான் பகுதியில் உள்ள அ. கொன்சன்ரன் மரியலூயிஸ் என்பவர்களது காணியில் பனம்பாத்தி போடுவதற்கான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மண்ணினுள் புதையுண்டிருந்த பானை ஒன்றின் மீது மண் வெட்டி கொத்தியதால் அது சிதறுண்டு போனது. சிதைந்த அப்பானையினுள் பழைய கால நாணயங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன.

இவ்வாறு தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட விடயம் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து உடனடியாக அவ்விடத்துக்குச் சென்ற அவர் மேலதிக ஆய்வுகளில் ஈடுபட்டார். இதன் போது மேலும் சில நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு சிறிய பெரிய நாணயங்கள் என மொத்தமாக 665 நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை டச்சுக் காலத்து நாணயங்கள் எனவும் 250 ஆண்டுகளுக்கு முற்பட்டவையே எனவும் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கின் தாளையடிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வின்போது பானை சட்டி போன்ற மட் பாண்டங்களின் சிதைவுகளும் மண்ணாலான நீர் அருந்தும் கேத்தல்களின் மூக்குகளும், மாலைகளுக்குப் பயன் படுத்துகின்ற மணிகள் முத்துக்கள் போன்ற சுமார் 2500 ஆண்டுகள் தொன்மையான தொல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன இவை சிவப்பு, செம்மஞ்சள் நரை நிறங்களை கொண்டுள்ளன.

மேற்படி இருவேறு இடங்களில் இருந்தும் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்கள் அனைத்தும் கிளிநொச்சியில் அமைந்துள்ள தொல் பொருள் காப்பகத்தில்வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. (லோ)




கண்டுபிடிக்கப்பட்ட, நாணயங்கள், தொல்பொருட்கள்

# கிளி.மாவட்ட வைத்தியசாலையில் மகப்பேற்று மருத்துவமனை திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பெற்ற மகப்பேற்று மனை நேற்றுக்காலை 9.15 மணிக்கு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. கிளி.மாவட்ட வைத்திய அதிகாரியும், கிளி.மாவட்ட சமூக சுகாதார அபிவிருத்தி நிறுவன தலைவருமாகிய வைத்தியக் கலாநிதி ச.விக்கினேஸ்வரன் தலைமையில நேற்றுக்காலை நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை நீதிமன்றப் பதி வாளர் ரத்தினம், டாக்டர் சிதம்பரநாதன் ஆகியோர் ஏற்றிவைக்கத் தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ சுகாதார



சேவைகள் துணைப்பொறுப்பாளர் மணிவண்ணன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நிகழ்வில் மகப்பேற்று மனையினை கிளி.கரைச்சிப்பிரதேசச செயலர் பொன்.நித்தியானந்தன் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார். பிரசவவிடுதியினை யுனிசெவ் மல்லாவி வதிவிடப் பிரதிநிதி பெனிபுருவும், குழந்தைகளுக்கான விடுதியினை கிளி.மாவட்டப் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியக்கலாநிதி சத்தியமூர்த்தியும் திறந்துவைத்தனர். நிறுவன செயலர் இ.கணேசபிள்ளை, உறுப்பினர் அ.கனகரத்தினம் மற்றும் சுகாதாரத் திணைக்கள மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர். கிளி.மாவட்ட 1ஆம் கட்ட வைத்தியசாலையில் இயங்கிவந்த மகப்பேற்றுமனை நேற்று முதல் கிளி.மாவட்ட வைத்தியசாலை (பழையமாவட்ட வைத்தியசாலை அமைவிடத்தில்) புதிதாகத் திறக்கப்பெற்ற மகப்பேற்று மனையில் நேற்றுமுதல் செயற்பெற தொடங்கியுள்ளது. கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களினால் வழங்கப்பெற்ற அரச நிதிமற்றும் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுடனும் மேற்படி மகப்பேற்று விடுதி அமைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# அளம்பில் திலீபன் மருத்துவமனையில் 3 மாதத்தில் 4138 பேர் சிகிச்சை

முல்லை அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் மூன்று மாதங்களில் 4138 பேர் சிகிச்சை பெற்றனர்.இதில் யூலை மாதம் 1488 நோயாளரும், ஆகஸ்ட் மாதம் 1350 நோயாளர்களும்செப்ரெம்பர் மாதத்தில் 1300நோயாளர்களும் சிகிச்சை பெற்றனர்.அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இவ்வைத்தியசாலை இயங்குகின்ற போதும் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெறு கின்றனர். (20)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை !

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசியகல்வியியற் கல்லூரியில் கல்விசார், கல்விசாரா பதவிகளுக்கு பெரும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்விசார் பதவிகளில் நிரந்தர பீடாதிபதி இல்லை. கல்விமேம்பாட்டிற்கான உப பீடாதிபதி இல்லை. பாட ரீதியாக விரிவுரையாளருக்கு பற்றாக்குறை நிலவுகின்றது என வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட் தெரிவித்தார்.

நிர்வாக ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்க கல்விசாரா பதவிகளில் மிக முக்கியமான பதவியான பதிவாளர் பதவிக்கு நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படவில்லை, எழுதுனர் பணியாளர் உட்பட பல பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன.

இவ் ஆளணிப் பற்றாக்குறையைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (10)

# ஒரே சூலில் பிறந்த 4 குழந்தைகளும் மரணம்

மட்டு போதனா வைத்தியசாலையில் ஒரே சூலில் பிறந்த நான்கு குழந்தைகளும் மரணம்.

மட்டு -போதனா வைத்தியசாலையில் ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு சூலில் பிரசவித்த நான்கு குழந்தைகளும் இறந்துள்ளன. 38 வாரங்களின் பின் பிரசவிக்க வேண்டிய குழந்தைகள் 30 வாரங்களில் பிறந்துள்ளமையினாலேயே குழந்தைகள் எடை குறைந்து முதிர்ச்சி அடையாத நிலையில் இறந்துள்ளன என தெரிவித்த வைத்திய நிபுணர் இத்தாய் ஒழுங்காக வைத்திய பரிசோதனைக்குச் சென்றிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது எனத் தெரிவித்தார்.

பட்டிப்பளை சுகாதார பணிமனை அத்தியட்சகர் பிரதேசத்திலேயே தாய் வாழ்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.


## இரண்டாம் ஆண்டு நிறைவில்



| தாய்மகிழ | தாய் மண்மகிழ |
|---|---|
| 04 - 04 - 1936 | 28 - 10 - 2001 |

**நாட்டுப்பற்றாளர் [லோயர்] கந்தசாமி அவர்களின்**

**(சமூக சேவையாளரும் தருமபுரம் சி.க.கூ.சங்கத்தலைவரும்)**

நீதியைச் சுமந்து என்றும்
நேர்மையாய் வாழ்ந்தீர் மண்ணில்
சேவையே வாழ்வாய்க் கொண்ட
செம்மலே எங்கே போனீர்?
கூப்பிடும்போது எங்கள்
குரலாக ஒலித்தீர் நீவீர்

சாப்பிட மறந்தும் எங்கள்
சந்ததி உயர வாழ்ந்தீர்
தேசம் மீது கொண்ட
பாசப்பிணைப்பினாலே
நீசரோடியெங்கள்
திசைகள் விடிய உழைத்தீர்.

நெஞ்சமெல்லாம் உம் நினைவோடு
**தருமபுரம் மக்கள் மற்றும் விசுவமடு பிரதேச மக்கள்**

(3507)

## மு/விசுவமடு மகாவித்தியாலயம்

## வெள்ளி விழாவும், பரிசளிப்பு விழாவும்

காலம் : 29-10-2003 புதன்கிழமை.

நேரம் : மு.ப. 10.00 மணி.

இடம் : வித்தியாலய கலையரங்கு.

நீர்வளமும், நில வளமும் ஒருங்கே கொண்ட விசுவமடுக்குளப் பகுதியில் கடந்த 1978ஆம் ஆண்டு ஆரம்பமான இப்பள்ளி தன்னுடைய 25ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து வெள்ளி விழாக் காண்கிறது. அளப்பரிய சாதனைகளுடன் குறுகிய காலப்பகுதியிலே 1 AB பாடசாலையாக தரமுயர்த்த இப்பள்ளியின் வெள்ளிவிழாக் காண அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வெள்ளி விழாக் குழுவினர்**

(3125)

# வெனிசுவெலா சுதந்திர நாடென்பதை அமெரிக்கா கவனத்தில் கொள்ளவேண்டும்

## -புதிதாக பதவியேற்ற சனாதிபதி அறிவுறுத்து

**அமெரிக்காவின் அடிமைகளாக இருக்கப்போவதில்லை என்று வெனிசுவெலா நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது. நாட்டின் சனாதிபதியான ஷகோபாவே இவ்வாறு கூறியுள்ளார்.**

இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவரான வெனிசுவெலா சனாதிபதி, அமெரிக்கா தமது நாட்டையும் சம அந்தஸ்து கொண்ட மற்றுமொரு நாடாகக் கருதவேண்டும் என்று நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

வெனிசு வெலாவுக்கும் அமெரிக்காவுக்குமான கருத்து முரண்பாடுகள் தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

உலகின் ஐந்தாவது எண்ணெய் வள நாடான வெனிசுவெலா தொடர்ந்தும் அமெரிக்காவின் கைப்பொம்மையாக இருக்கப் போவதில்லை என்று வலியுறுத்தி வருகின்றது.

வெனிசுவெலாவின் சனாதிபதி கடந்தவார இறுதியில் தொலைக்காட்சிக்கும், வானொலிக்கும் பேட்டியளித்திருந்தார்.

இவர் தனது பேட்டியின் போது வெனிசுவெலா ஐக்கிய அமெரிக்காவோடு முரண்பட விரும்பவில்லை என்றும், வெனிசுவெலா சுதந்திர நாடு என்பதை அமெரிக்கா கவனத்திற் கொள்ளுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

சுதந்திரநாடு ஒன்றை ஏனைய நாடுகள் எப்படி நடத்துமோ அப்படியே அமெரிக்காவும் அந்நாட்டை நடத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கு எதிரான கியூபா உள்ளிட்ட பல நாடுகளோடு வெனிசுவெலா உறவு கொண்டிருப்பதாக ஐக்கிய அமெரிக்கா கருதிவருகின்றது.

அதுமட்டுமன்றி இடதுசாரித் தீவிரப் போக்குடையவர்களுடனும், இஸ்லாமிய சக்திகளுடனும் இணைந்து செயற்படுவதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

அதேநேரம் தமது ஆட்சியை அமெரிக்கா இல்லாது அழித்துவிடுவதற்காகவே அமெரிக்கா குற்றச்சாட்டுக்களை அடுக்குவதாக தற்போதைய சனாதிபதி குற்றம் சாட்டுகின்றார்.

இதனால் பாவே தனது ஆட்சியைத் தொடர்வதற்கான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



பாக்தாத்தில் நேற்று முன்தினம் அல்-ரசீட் ஹொட்டேல் மீது நடத்தப்பட்ட ரொக்கற் தாக்குதலின் பின் அவ்விடத்தில் ரோந்து செல்லும் அமெரிக்கப் படையினர்.

# அவுஸ்.அணுசக்திக் கழிவுகள் பிரான்சிற்கு அனுப்பிவைப்பு

40 வருட காலத்தில் அணுசக்தி கழிவுகளை 6ஆவது தடவையாக அவுஸ்திரேலியா பிரான்சிற்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்தக் கழிவுப் பொருட்கள் தீவிர பாதுகாப்புடன் சிட்னி துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. பிரான்சில் இவை சுத்திகரிக்கப்படும்.

அவுஸ்திரேலியாவின் ஒரேயொரு அணுசக்தி நிலையமான அவுஸ்திரேலிய அணுசக்தி விஞ்ஞான தொழில்நுட்ப அமைப்பின் பணிப்பாளர் பொன் தமரோன் கருத்துக் கூறுகையில், 344 மெட்ரிக் தொன்கள் அணுசக்தி கழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டதாகவும்,98 இலட்சம் டொலர்கள் செலவில் இவை பிரான்சில் சுத்திகரிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

கப்பல் மூலம் பிரான்சிற்கு அணுசக்தி கழிவுகள் அனுப்பிவைக்கப்பட்டமைக்கு கிறீன்பீஸ் இயக்கத்தினர் சிட்னித் துறைமுகத்தில் பதாதைகளை ஏந்தியவண்ணம் வந்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

# தெற்கு கலிபோர்னியாவில் காட்டுத்தீ ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

## - நாடு முழுவதும் அவசரகாலநிலை பிரகடனம்

கலிபோர்னியாவில் தென் பகுதியில் வேகமாகப் பரவி வரும் காட்டுத்தீ காரணமாக இதவரை 10 பேர் உயிரிழந்துள்ளார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து, அப்பகுதிகளை விட்டு வெளியேறி வருகின்றார்கள்.

இந்தக் காட்டுத்தீயின் காரணமாக கலிபோர்னியா முழுவதும் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதான வீதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. இதேவேளை திட்டமிட்ட செயலினாலேயே இந்தக்காட்டுத்தீ பரவி இருக்க வேண்டும் என சந்தேகம் எழுந்துள்ளது.

இதனால் பொலிஸ் விசாரணைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை கலிபோர்னியாவில் தென்பகுதியிலுள்ள வனப்பகுதியில் கடந்த மூன்று நாட்களாகப் பரவிவரும் காட்டுத்தீ காரணமாக சுமார் 40,500 ஹெக்ரேயர் தூரத்திற்குப் பரவியிருப்பதாகக் கூறப்படுகின்றன.

சுமார் 350இற்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளதோடு, ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

வேகமாகப் பரவிவரும் தீயினைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமாக இருப்பதாக, தீயணைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள தீயணைப்புப் படைத்தலைவர் கூறியுள்ளார்.

இந்நிலையினால் கலிபோர்னியாவின் தென்பகுதியில் மின்னிணைப்புக்களும் துண்டிக்கப்படவேண்டிய நிலை உருவாகியுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.



கலிபோர்னியாவின் ரமோனாவில் காட்டுத்தீயால் வீடொன்று எரிகிறது.

# கட்சிகளிடையே மோதல் பாலித் தீவில் இருவர் பலி!

இந்தோனேசியாவின் பாலித் தீவில் இரண்டு கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு பேர் இறந்துள்ளார்கள். நான்கு பேர் காயமடைந்துள்ளார்கள்.

இந்தோனேசியாவில் அடுத்த வருடம் யூலை மாதம் 5ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. முதலாவது சுற்றில் 50 சதவீத வாக்குகளைத் தொகுதி வேட்பாளர் பெறாதுவிட்டால் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடைபெறும்.

அதேநேரம் பாராளுமன்றத் தேர்தல்கள் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# தீவிரவாதிகளின் நிதிப் பரிமாற்றங்களை கட்டுப்படுத்த உலக நாடுகள் கூடி ஆராய்வு

## - தடுக்க முடியாதுள்ளதையிட்டும் கவலை

தீவிரவாதிகளுக்கான நிதி இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் மாநாடு ஒன்று மெக்ஸிக்கோவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

இந்த மாநாட்டில் அபிவிருத்தியடைந்த நாடுகளும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் கலந்துகொண்டுள்ளன.

இந்த நாடுகளின் மத்திய வங்கிகளின் தலைவர்கள், உரிய நாடுகளின் நிதியமைச்சர்களும் கலந்துகொண்டுள்ளார்கள்.

உலக நாடுகளில் ஏற்பட்டு வரும் பொருளாதார வீழ்ச்சி குறித்து இம்மாநாட்டில் ஆராயப்பட்டு, இவ்வீழ்ச்சிக்கான காரணிகளில் ஒன்றாக இருக்கும் தீவிரவாதிகளின் தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும் குறிப்பாக கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.


உலகவங்கி வலையமைப்பினூடாக தீவிரவாதிகள் எவ்வாறு தமது நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடிகின்றது என்று அமெரிக்கத் திறைசேரிச் செயலாளர் இம்மாநாட்டில் வினா தொடுத்துள்ளார்.

பல நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டாலும் கூட, வலையமைப்பினூடாக தீவிரவாதிகளின் நிதிப் பரிமாற்றத்தை இன்றுவரை கட்டுப்படுத்த முடியாத நிலையே இருக்கின்றது.

அதேநேரம் அல்கெய்தா போன்ற தீவிரவாத அமைப்புக்களே மிகச் சாதுரியமாக நிதிப் பரிமாற்றம் செய்வதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் மாநாட்டில் போருக்குப் பின்னரான ஈராக்கிய அபிவிருத்திச் சேவை பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

"குறுப்-20" என அழைக்கப்படும் இம்மாநாடு பயங்கரவாதம் தொடர்பாக நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.



இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் ரம்ழான் மாதத்தில் பள்ளிவாசலொன்றில் தொழுகையிலீடுபடும் முஸ்லிம்கள்.

# "பொடோ" சட்டத்தில் விரைவில் திருத்தம்; தமிழக முதலமைச்சர் கடும் எதிர்ப்பு

(சென்னை)

பொடோ சட்டத்தில் திருத்தம் செய்து அவசர சட்டம் பிறப்பிக்கவுள்ளதாக மத்தியரசின் முடிவிற்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

பொடோ மீளாய்வு குழுவினருக்கு கூடுதலான அதிகாரம் வழங்கும் வகையில் பொடோ சட்டத்தில் திருத்தங்கள் செய்து அவசர சட்டமாக அமுலுக்குக் கொண்டுவர மத்தியரசு பரிசீலித்து வருவதாகவும், இந்த நடவடிக்கை பொடோ சட்டம் கொண்டு வருவதற்கான நோக்கங்களையே அழித்துவிடும் என்றும் முதலமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

நாட்டில் உள்ள தற்போதைய பாதுகாப்புச் சூழ்நிலையில், மாநிலங்களில் பாதுகாப்பைப் பேண தற்போதுள்ள சட்டதிட்டங்களைப் பலப்படுத்த வேண்டுமே தவிர, அதனைத் திருததங்கள் என மாற்றியமைக்கவோ, திரும்பப் பெறுதலோ மாநிலங்களின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாககிவிடும் என்றும் கூறியுள்ளார்.

அமைதியைச் சீர்குலைக்க முயலும் தீவிரவாத சக்திகளையும் நாசகார சக்திகளையும் ஒடுக்க தமிழ்நாடு போன்ற முற்போக்கான அரசுகள் மேற்கொண்டுவரும் முயற்சிகளும் இந்த முடிவால் பாதிக்கப்பட்டுவிடும் என்றும் தமிழக முதலமைச்சர் நேற்றுமுன்தினம் அறிக்கை மூலம் கூறியுள்ளார்.

# மிசோராம் சட்டசபைக்கு நவம்பர்–20ல் தேர்தல்

மிசோராம் சட்டசபைத் தேர்தலுக்கான திகதியைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இதனையடுத்து தேர்தல் வழிமுறையும், வேட்புமனுத் தாக்கலும் தொடங்கப்பட்டுள்ளது.

மிசோராமில் சட்டசபைத் தேர்தல் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. வாக்குகள் எண்ணிக்கை டிசம்பர் இரண்டாம் திகதியே நடைபெறவுள்ளது. சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ள ஏனைய நான்கு மாநிலங்களான சத்திஸ்கார், மத்திய பிரதேசம், டில்லி, ராஜஸ்தான் ஆகியவற்றிற்கான அறிவிப்புக்கள் அடுத்த மாதம் 7ஆம் திகதியே தேர்தல் ஆணையம் வெளியிடவுள்ளது. வாக்குப் பதிவுகள் டிசம்பர் முதலாம் திகதி இடம்பெறும்.




# அவுஸ்திரேலியாவுக்கு அதிர்ச்சித் தோல்வி: கணக்குத் தீர்த்தது இந்தியா



இந்தியாவில் நடைபெற்று வரும் முக்கோண ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் இந்திய அணி உலகச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியை 37 ஓட்டங்களால் தோற்கடித்தது.

உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்குப் பின்னர் இரு அணிகளும் சந்திக்கும் முதல் போட்டியாக இது அமைந்ததால் பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததுடன் இந்தியணியின் திறமையை சோதிக்கும் போட்டியாக அமைந்தது. அத்துடன் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்கும் போட்டியாக அமைந்தது. அதுவே வெற்றியாகவும் அமைந்தது.

குவாலியூரில் இரவு பகலாக நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி, ஆரம்பத் துடுப்பாட்ட வீரா வீரேந்தர் ஷேவாக் முதலாவது ஓவரில் மூன்று பந்துகளை எதிர்கொண்டு ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டம் இழந்தார். இதனால் இந்திய அணி சற்றுத்தடுமாற வேண்டிய நிலை.

இந் நிலையில் தாய் நாட்டில் எவருக்கும் மண்டியிடோம் என்ற துணிச்சல் மிக்க வீரரும் நியூசிலாந்துடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பிளெமிங்கின் வெற்றிக் கனவை கலைத்தவருமான வி.வி.எஸ் லக்ஸ்மன் சச்சின் டெண்டுல்கருடன் இணைந்து சிறப்பான துடுப்பாட்டத்தை வழங்கி அணியை ஸ்திர நிலைக்கு இட்டுச் சென்றதுடன் டெண்டுல்கருடன் இணைந்து மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக 191 ஓட்டங்களை பெற்று அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றார். இதன் மூலம் ஒரு நாள் போட்டியில் இரண்டாவது சதத்தினையும் பெற்றார்.

நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் நம்பிக்கை வீரருமான சச்சின்



டெண்டுல்கர் இப் போட்டியில் 35 வது சதத்தினை பூர்த்தி செய்தார்.

இந் நிலையில் விக்கெட்டுக்களை வீழ்த்துவதில் தோல்வி கண்ட அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் ஓட்ட எண்ணிக்கையை தனது நீண்டகால அனுபவத்தின் மூலம் வியூகங்களை அமைத்து கட்டுப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருந்தார் அதில் வெற்றியும் கண்டார்.

இதனால் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் இந்திய அணி அவுஸ்திரேலிய அணியால் எட்டிப்பிடிக்க கூடிய எண்ணிக்கையான 283 ஓட்டங்களை ஐந்து விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக் கொண்டது.

இதில் யுவராஜ்சிங் அஜித் அகாக்கர் ஆகியோர் தமது அதிரடி ஆட்டத்தின் மூலம் 44,22 ஓட்டங்களை முறையே பெற்றுக்கொண்டனர். அகாக்கர் பத்து பந்துகளை எதிர்கொண்டு 22 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு ஆடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களை எந்தவித அழுத்தமும் இன்றி குவிக்க இந்திய அணி ஒருகட்டத்தில் ஆரம்பஜோடியை பிரிப்பதற்குத் திணறியது. இம்முயற்சி அணி 132ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வேகப்பந்து வீச்சாளர் சகீர் ஹானால் நிறைவேறியது.

மேற்படி ஓட்ட எண்ணிக்கை அவுஸ்.அணிக்கு வலுவான நிலையைக் கொடுத்தபோதும் அவுஸ்.அணியின் பின் வரிசை வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டம் இழந்ததால் வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற முடியாது போனது.

துடுப்பாட்ட வீரர்களுக்கும் பந்து வீச்சாளர்களுக்கும் சாதகமான நிலையில் ஆடுகளம் இருந்தபோதும் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் இந்திய பந்து வீச்சாளர்களை எதிர்கொள்வதில் சிரமத்தை எதிர் நோக்கினர். இதனால் ஆடுகளத்தில் நிலைத்துநின்று ஆடும் அவுஸ். வீரர்களின் நிலை தடுமாறியதுடன் வெற்றி வாய்ப்பும் கை நழுவத் தொடங்கியது.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களை மாத்திரமே ஆவுஸ் அணியால் பெறமுடிந்தது. துடுப்பாட்டத்தில் அடம்கில் கிறிஸ்ட் துணிச்சலுடன் ஆடி 83 ஓட்டங்களைப்பெற்றார். ஹெய்டன் 47 ஓட்டங்களைப்பெற்றார்.

பந்துவீச்சில் வேகப்பந்துவீச்சாளர்



சகீர்ஹான் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தி போட்டியின் போக்கை திசைதிருப்பினார். பக்கபலமாக அனில் கும்ளே, வீரேந்தர் ஷேவாக் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

உலகத் தரவரிசையில் முதல் இடத்திலுள்ள அவுஸ்திரேலிய



அணி இப்போட்டித் தொடரில் தான் சந்தித்த முதலாவது போட்டியில் தோல்வி அடைந்துள்ள நிலையில் அடுத்து வரும் போட்டிகள் அவுஸ்திரேலிய அணியைப்பொறுத்து சவால்மிக்கதொன்றாகவே அமையப் போகின்றது.

ஏனெனில் இப்போட்டித் தொடரில் உலகின் முன்னணிப் பந்துவீச்சாளர்களான மெஹ்ராத், பிரட்லி ஆகியோர் அவுஸ்திரேலிய அணியில் இடம்பெறாதது முதல் போட்டியிலேயே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக கருதும் அவுஸ்திரேலியா இனி வரும் போட்டிகளை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது என பொறுத்திருந்து பார்ப்போம்.

# நம்பிக்கை

உபாதை காரணமாக இங்கிலாந்து அணியில் நிலைத்திருக்க முடியாது அவதிப்பட்ட ஆரம்ப பந்துவீச்சாளரும் வேகப்பந்து வீச்சாளருமான டெரன்கோ 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியதீவுகளில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதே தனது இலக்கு எனத் தெரிவித்துள்ளார்.



அத்துடன் பங்களா தேஷ் மற்றும் சிறிலங்கா அணிகளுக் கிடையிலான கிரிக்கெட் சுற்றுலாவுக்குதான் தெரிவு செய்யப்படாமைக்கு மன வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் தெரிவித்துள்ள அவர் இங்கிலாந்து தேர்வுக் குழு குறித்துத் தான் ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது 32 வயதாகும் டெரன் கோ தொடர்ச்சியான உடல் உபாதை காரணமாக இம்முறை தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ணப்போட்டியில் விளையாடும் வாய்ப்பை இழந்தார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்த டெரன்கோ அடுத்த நான்கு வருடங்களுக்கு இங்கிலாந்தின் ஒருநாள் அணியில் இருப்பது குறித்துச் சிந்தித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள இங்கிலாந்து ஒருநாள் அணியில் உள்ள வீரர்களில் அரைவாசிப்பேர் அடுத்த உலகக்கிண்ணப்போட்டிவரை நிலைத்திருப்பார்களா. என்ற கேள்வி வலுவாக எழுந்துள்ள நிலையில் இவ்விடயம் தேர்வுக்குழுவின் கைகளிலேயே தங்கியுள்ளது. அவர்களே இவர்கள் பொருத்தமானவர்களா? அல்லது இல்லையா என்ற பொறுப்பைச் சுமந்துள்ளனர்.

இந்நிலையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஐ.சி.சி.யின் மினி உலகக்கிண்ணப் போட்டியை இலக்காகக்கொண்டுள்ள டெரன்கோ அதில் இருந்து இரண்டு வருடங்கள் உலகக் கிண்ணப் போட்டிக்குத் தயாராக சந்தர்ப்பம் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

ஒருநாள் போட்டியையே நம்பியிருக்கும் டெரன்கோவின் கிரிக்கெட் வாழ்வு தொடருமா?

# கராத்தே சுற்றுப் போட்டி

ஆளுமை, நற்பண்பு, ஆரோக்கியம் ஆகியவற்றை வளர்க்கும் கலைகளில் ஒன்றான கராத்தே கலையை வளர்க்கும் நோக்கில் தமிழீழத் தாயகத்தின் பல பகுதிகளிலும் அதற்கான சங்கங்கள் அமைக்கப்பட்டு கராத்தே கலை பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு ஊக்கமும், ஆதரவும் வழங்கும் வகையில் தமிழீழ விளையாட்டுத்துறை கராத்தே சுற்றுப் போட்டி ஒன்றை தாயகம் தழுவிய ரீதியில் கடந்த வாரம் நடாத்தி நிறைவு கண்டது.

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக நடைபெற்ற இச் சுற்றுப்போட்டியில் தாயகத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த கராத்தே கலையை முறைப்படிகற்றுவரும் 200க்கு மேற்பட்ட வீரவீராங்கனைகள் பங்குபற்றினர்.





மாவட்ட ரீதியாக நடைபெற்ற இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் 90 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப்பெற்றது. முல்லைத்தீவு மாவட்டம் 65 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், யாழ்ப்பாண மாவட்டம் 42 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

கிளிநொச்சி மாவட்டம் முதல் இடத்தைப் பெறுவதற்கு குருகுலம், காந்தி நிலைய மாணவ மாணவிகளின் துணிச்சல் மிக்க அபாரமான திறமை பக்கபலமாக அமைந்தது.

சர்வதேச விதிகளுக்கமைய நடைபெற்ற இச் சுற்றுப்போட்டியை இலங்கையின் கராத்தேயின் தந்தையும், எட்டாவது கறுப்புப்பட்டி பெற்றவரும் இதற்காக தமிழீழ தேசியத் தலைவரிடம் இருந்து விருது பெற்றவருமான கிராண்ட் மாஸ்ரர் சீகான்பொனி றொபேட்ஸ் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். ஜப்பான் நாட்டைத் தாயகமாகக் கொண்ட இக்கலை எவராலும் எளிதாகப் பயின்றுவிடமுடியாத தொன்றாகும்.

இப்படிப்பட்ட உன்னத தலையைத் தமிழீழத்தில் வளர்ப்பதற்கு துறைசார்ந்தவர்கள் அயராது பாடுபடவேண்டும். ஏனெனில் எமது தாயகத்துக்குப் பொருந்தக் கூடிய ஒருகலை இது.

இக்கலையைக் கற்பவர்கள் அனைவரும் முறையாகக் கற்றுள்ளனரா என்றால் அது கேள்வியாகவே உள்ளது.

இந்நிலையில் இக்கலையை வளர்ப்பதற்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ள தமிழீழ விளையாட்டுத்துறை மேலும் கராத்தே சுற்றுப்போட்டிகளை நடத்துவதன் மூலம் இக்கலை தாயகத்திலும் பூரணத்துவம் அடையும் எனத் துணிந்து கூறலாம்.

# 'மக்கள் சக்திப் பேரணி' தோல்வியில் 'மக்கள் பிரதிநிதிகளிடம்' ஓடுகிறார் சந்திரிகா!

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனக்குள்ள "மக்கள் சக்தியை" வெளிப்படுத்தவென கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய பேரணி அதற்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. 10 இலட்சம் பேரைத்திரட்டித் தனது மக்கள் பலத்தைக்காட்டி ஐக்கியதேசிய



பேரணியைப் பார்வையிடும் சந்திரிகா

முன்னணி அரசாங்கத்தைக் கதிகலங்கச் செய்வது அதனது திட்டமாக இருந்தது. அதன் விரிவாக்கம் ஆட்சிக்கவிழ்ப்புவரை செல்ல இருந்தது. ஆனால் இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியே கலங்கிப் போயிருக்கிறது.

நிறைவேற்று அதிகாரம் எதுவுமற்று அதனது பலத்த முட்டுக்கட்டைகளுக்கு மத்தியில் சுமார் 22 மாதங்கள் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி புரிந்து விட்டது. இந்த ஆட்சி மூன்று மாதங்கள் கூட நிலைக்காது என்பது சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள பலரது ஆருடமாக இருந்தது.

முதலாவதாக நிதி நெருக்கடி. இரண்டாவதாக யுத்தம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டு அமைதி நீடித்தாலொழிய ஆட்சியைத் தொடர்வது கடினம். மூன்றாவதாக சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம். இந்த அதிகாரமானது நாட்டின் தலைமைப் பொறுப்பு, அமைச்சரவையின் தலைமைப்பொறுப்பு, முப்படைகளினதும் தலைமைப் பொறுப்பு இவ்வாறு அளவற்ற அதிகாரங்களைக் கொண்டிருக்கிறது. யுத்தத்தை நிறுத்தும் அதிகாரம் அல்லது யுத்தத்தை ஆரம்பிக்கும் அதிகாரம் சனாதிபதியிடம் மட்டுமே உண்டு.

இவ்வாறு அரசியலமைப்பு ரீதியாக மட்டற்ற அதிகாரங்களைக்கொண்ட சனாதிபதிப் பதவியைதம்வசம் வைத்திருக்கும் நிலையில் ஆட்சியை எந்த நேரத்திலும் கவிழ்த்துவிட முடியும் என்பது சு.க.விலுள்ள பலரது கணிப்பு. அரசியலமைப்பு ரீதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றமொன்றை ஒரு வருடங்களுக்கு முன்னதாகக் கலைத்துவிடும் அதிகாரம் சனாதிபதிக்கு இல்லை. ஒருவருடங்களின் பின்னர் சனாதிபதிக்கு அவ் அதிகாரம் கிடைத்துவிடும் என்பதால் அதற்குப் பின்னர் எந்த நொடியும் பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்திவிடலாம் என்பது அவர்களின் அதிகூடிய காலக்கெடுவாக இருந்தது.

எனினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலக்கெடுவாக இரண்டு வருடங்களாக இருந்தன. 2001 டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கட்சி தோல்வியடைந்துஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைத் தவிர்க்க முடியாது பதவிப்பிரமாணம் செய்துவைத்தபின் சு.க.அமைப்பாளர்கள் கூட்டமொன்றில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றினார். அப்பொழுது "இரண்டு வருட காலத்திற்குள் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைக் கைவிட்டு ஓடுவார்" எனக் கூறியிருந்தார்.

இவ்வாறு அவர் கூறுவதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று அன்றிருந்த நிதிநிலை. இரண்டாவது புலிகள் யுத்தத்தை இரண்டு வருடகாலத்திற்குள் எப்படியாவது ஆரம்பித்து விடுவார்கள் என அவர் பூரணமாக நம்பியமை.

நிதிநெருக்கடி காரணமாக வரவு செலவுத் திட்டமொன்றைத் தயாரிப்பது அதிலும் தேர்தல் காலத்தில் வழங்கியவாக்குறுதிகளை நிறைவேற்றத்தக்க வகையில் வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிப்பது என்பது கடினமான காரியமென்பது சந்திரிகா குமாரதுங்கவிற்குத் தெரியும். அவர் நடத்திய யுத்தம் காரணமாக சிறிலங்கா ஒரு ஆபத்தான பிரதேசமாக்கப் பட்டிருந்தது. அதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள், உல்லாசப்பயணிகள் இங்கு வரத் தயங்கினார்கள். பொருளாதாரவளர்ச்சி மறைப்பெறுமானத்துக்குச் சென்றிருந்ததுஎவ்வகையிலும் பொருளாதார நிலையில் மீட்சி பெறமுடியாத நிலை.

விடுதலைப்புலிகள் புதிய ஆட்சியுடன் சமாதானப் பேச்சுக்குத் தயார் நிலையில் இருந்தாலும், யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்பட்டுப் பேச்சுக்கள் தொடர்ந்து யுத்தநிறுத்தம் நீடிக்கும் என்பதில் அவருக்கு நம்பிக்கையிருக்கவில்லை. எனவே யுத்தம் ஒன்று ஆரம்பிக்குமானால் ரணில் அரசாங்கத்தால் தாக்குப்பிடிக்கமுடியாது. எனவே பதவியை விட்டு ஓடியேயாகவேண்டும் என்பது அவரது முடிவாக இருந்தது. இந்நிலையில் நிதிநிலைமை சீராகக் கூடாது அமைதிநிலையை நீடிக்கவிடக்கூடாது என்பது அவரது திட்டமாக இருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று ஏற்படுவதற்கே முட்டுக்கட்டைகள் போட்ட சனாதிபதி சந்திரிகா, அதன் சீரான நடைமுறைப்படுத்தலைக்குழப்பத் தனது முப்படைத்தலைமை அதிகாரத்தைப் பயன்படுத்தினார். குறிப்பாக கடற்படைத்தளபதியின் பதவிக்காலத்தை மூன்று ஆண்டுகள் நீடித்து அவரைத் தனது கைப்பொம்மையாக்கி எவ்வாறாயினும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் குழப்பிவிட முயன்றுவருகின்றார்.

அதேவேளை பொருளாதார ரீதியாக சிறிலங்கா சந்தித்தபின்னடைவு 18 மாதகாலப் போர்நிறுத்தம் காரணமாகச் சீரடைந்து வருவதுடன், மேற்குலக அணி ரணில்விக்கிரமசிங்க அரசுக்கு பொருளாதார ரீதியில் உதவி வருகிறது. சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காணும் பட்சத்தில் மேலும் உதவத்தயாராக இருக்கின்றன.

இந்நிலையில் இவ்விருமுனைகளும் தோல்வியடைந்த நிலையில், மக்கள் ஆதரவுபெற்ற அரசாங்கம் என்பதனால் ஆட்சிக்கவிழ்ப்பையும் தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் செய்ய முடியாததனால், மக்கள் ஆதரவு தமது கட்சிக்கே உண்டுஎன அவர் காட்டமுயன்றார்.

சமாதான முயற்சிகள் முன்னேற்றம் எதுவுமின்றி இழுபட்டுச்செல்கின்றமை, கடந்த 18 மாதங்களுக்கு மேலாக இச் சமாதான முயற்சிகள் நாட்டிற்கு பேரழிவையேதரும் எனச் செய்துவரும் இனவாதப் பொய்ப் பிரச்சாரம், ஜே.வி.பி.யின் இந்த தீவிரப்பிரச்சாரத்திற்கு கிடைத்த ஆதரவு என்பனவற்றை நம்பி 10லட்சம் பேரைத்திரட்டிவிட சு.க.முயற்சி செய்தது.



"ஆட்சியை நீரக்கவிட்டது போதும், பொறுத்தது போதும் " என சு.க.ஆதரவாளர்களும் அரசியல் வாதிகளும் உள்ளுக்குள்ளேயே முனகிக்கொண்டிருக்கின்றனர். அத்துடன் தனது நிறைவேற்று அதிகாரத்திற்கு கடந்த 22மாதங்கள் ஏற்பட்டபல சோதனைகள் - இறுதியில் சர்வதேச நாடுகள் கலந்து கொள்ளும் ஐ.நா.வின் 58ஆவது மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது போனமை இவற்றால் பொறுமையிழந்த நிலையில் இப்பேரணிக்கு சந்திரிகா திட்டமிட்டார்.

இந்தப்பேரணி அவர் நினைத்தவாறு வெற்றியைத் தேடித்தருமானால், எதிர்வரும் டிசெம்பர் நடுப்பகுதிவரை பிரதேச ரீதியாக எதிர்ப்புப் பேரணிகளை நடத்தி அவற்றின் மூலம் ரணில் அரசாங்கத்திற்கும் சர்வதேச நாடுகளுக்கும் தனக்குஉள்ள மக்கள் ஆதரவை வெளிப்படுத்தி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை இரண்டாவது ஆண்டு பூர்த்தியை அடையவிடாது அதனைக் கலைத்துவிடுவது சந்திரிகாவின் திட்டமாக இருந்தது.

ஆனால் 5முனைகளில் நடத்திய பேரணிகள் எதிர்பார்த்த மக்கள்தொகையில் 10வீதத்தைக் கூடக் கொண்டிராதது அவர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தையே கொடுத்தது. ஒருமுனையில் மெய்ப்பாதுகாவலர் மட்டுமே இருக்கதனியே நின்று (வழமையாக முப்படைத்தளபதிகள் சூழ நின்று பேரணி களைப்பார்வையிடுவதே வழமை.) குறைந்தபட்சம் சகாக்கள்கூட , அருகிலில்லாது (அவர்கள் ஊர்வலத்தைநடத்திச் சென்றிருந்தனர்) ஊர்வலத்தைப்பார்வையிட்ட சந்திரிகா இறுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில்கூட பங்கேற்காது தவிர்க்க வேண்டியநிலைக்குத்தள்ளப்பட்டார்.

இப்பொழுது மக்களில் நம்பிக்கையிழந்துவிட்டநிலையில் "மக்கள் பிரதிநிதிகளை" நம்பும் நிலைக்கு வந்திருக்கிறார். அதாவது அடுத்தமாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தைத்தோற்கடிக்க ஜே.வி.பி. யினர். மட்டுமல்ல ஐ.தே.க.விலுள்ள சிலபாராளுமன்ற உறுப்பினர்களும் உதவுவார்கள் என அவர் நம்புகின்றார் அதன்மூலம் அரசாங்கத்துக்கு இடையூறு விளைவித்து அதனை விரட்டிவிட முடியும் என நம்புகிறார்.

**- வேல்வன்-**



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட தேசிய கல்வியியற்கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் செல்வி.D.R.E. கஜநாயக்கா மங்கல விளக்கேற்றுவதனை படத்தில் காணலாம்.

படப்பிடிப்பு: ஆறு. கபாஸ்கரன் [வவுனியா செய்தியாளர்]

## வீதிவிபத்துக்களைத் தடுக்க மாணவரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த யாழ்.இல் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கருத்துரைகள் வழங்கும் நடவடிக்கையில் மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் என்ற அமைப்பு ஈடுபடவிருக்கின்றது. இந்த அமைப்பின் மேலதிக ஆணையாளர் பி.சஞ்ஜித்குமார் இத்தகவலைக் கூறியுள்ளார்.

கடந்த சனியன்று காலை சங்கப் பணிமனையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், குடாநாட்டில் விபத்துக்களைத் தடுப்பதற்காக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் எமது சங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக யாழ்.நகரப் பாடசாலைகளில் மாணவர் மத்தியில் வீதி ஒழுங்குகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

இதற்கு யாழ். பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிசாரிடம் உதவிகள் கிடைத்துள்ளன.

இரண்டாம் கட்டமாகப் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் என்றும் கூறியுள்ளார்.

## கால போக செய்கைக்காக மூன்று நெல்லினங்கள் அறிமுகம்

இவ்வருடம் பெரும் போகத்திற்காக மூன்றுவகையான நெல்லினங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

B.W.361 , A.T.362 , B.G.360 (சம்பா இனம்) ஆகியன விவசாயப் போதனாசிரியர் பிரிவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதே போன்று நிலக்கடலையில் இந்தி திச என்னும் புதிய இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாசிப்பயறு இனத்தில் ஆரி என்னும் இனமும் அறிமுகப்படுத்தியுள்ளதாக முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன் தெரிவித்துள்ளார் - (20)

# இலட்சக்கணக்கில் இழந்து போன பனைவளத்தை ஈடுசெய்ய தீவிர முயற்சிகள் எடுக்க வேண்டும்

## -தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வலியுறுத்து

**(அலுவலக செய்தியாளர்)**

**"எமது மண்ணில் ஏற்பட்ட பெரும் யுத்தத்தால் ஆயிரக்கணக்கான மக்களை நாங்கள் இழந்தது போல எமது மண்ணின் தேசிய வளமான பனை வளத்தையும் இலட்சக்கணக்கில் இழந்திருக்கிறோம். இவ்வாறு இழந்த பனைவளத்தை ஈடுசெய் வதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பா ளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.**



கிளிநொச்சி மகாவித்தியாலயத் தில் கடந்தசனிக்கிழமை பனைதென் னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் முப்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணை யத்தால் வெளியிடப்பட்ட முப்பதா வது ஆண்டுசிறப்பு மலர்வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்புரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; இந்தப்பனைவளம் எமது வரலாற் றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே எமது மண்ணில் இருந்து வருகிறது. பனைவளம் எமது பல்வேறுபட்ட தேவைகளை நிறைவு செய்து வந் திருக்கிறது. எமது மண்ணில் ஏற் பட்ட பெரும் யுத்தத்தால் ஆயிரக் கணக்கான மக்களை நாங்கள் இழந்தது போல எமது மண்ணின் தேசிய வளமான பனைவளத்தையும் இலட்சக்கணக்கில் இழந்திருக் கிறோம். இவ்வாறு இழந்த பனை வளத்தை ஈடுசெய்வதற்கானதீவிரநட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் நாம் புதிதாக உருவாக்கிய மீள்நடுகை செய்த பனைகளை விட போரினால் நாம் இழந்த பனைகளின் தொகை அதிகமாகவே உள்ளது. போத்துக் கேயரின் ஆட்சிக்காலம் முதல் இன்றைய காலம்வரை எமது தேசத்தின் வளமான பனை வளம் அழிக்கப்பட்டே வந்திருக்கிறது.

எத்தனை அழிவுகள் வந்த போதும் எமது மண்ணின் வற்றாத செல்வமாக இந்தப் பனைவளம் செழித்துக்கொண்டிருக்கிறது. எனினும் இந்தப்பனை வளத்தை பனையில் இருந்து கிடைக்கின்ற நன்மைகளை நாம் முழுமையாகப் பயன்படுத்துவதில்லை அவற்றை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதுடன் அவற்றின் பயன்க ளையும் இன்றைய இளம் சமூகம் நன்கு அறிந்து அவற்றை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எமது மாணவ சமூகத்திற்கு பனைவளம் பற்றியும் அதனால் கிடைக்கக்கூடிய நன்மைபற்றியும் அதனை பாதுகாக்கவேண்டியதன் அவசியம் பற்றியும் எடுத்துக்கூறக் கூடிய வகையில் அரசு அமைத்த பாடத்திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. சிங்கள சமூகத்திற்கு தேவையானவை எவையோ அவை யே கல்வித்திட்டத்தில் இணைக்கப் பட்டு எமது மாணவர்களுக்கும் திணிக்கப்பட்டு வருகிறது. அதனால் மாணவர்கள் மத்தியில் பனைவளத் தின் முழுமையான பயன்கள் பற்றிய விளக்கம் இல்லாமல் இருக்கிறது.

எனவே எமது மண்ணின் வளங் களை எமது மாணவர்களுக்கு எடுத் துக் கூறக் கூடிய வகையிலே பாடத்திட்டங்களை அமைக்கவேண் டும் எனவும் தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில், எமது தாயக விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சிக்கும் எமது மண்ணின் வளர்ச்சிக்கும் பனை,தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்கள் பெரும் பணி ஆற்றியுள்ளன. இவர்களின் இத்தகைய பெரும் பணி பனைச்செல்வம் வாழ்கின்ற காலம் வரை வாழ்ந்து பல்வேறு பணிகளை இந்த மண்ணில் மேற்கொண்டு சிறப்புற மிளிர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

## கசிப்பு உற்பத்தியாளருக்கு 1,10,000ரூபா அபராதம்!

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தி செய்ததுடன் கசிப்பு உபகரணங்களை வைத்தி ருந்த நபருக்கு ஒரு இலட்சத்துப் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸாரால் 8 போத்தல் கசிப்பு மற்றும் 222போத் தல் கோடா மற்றும் கசிப்புக் காய்ச் சும் உபகரணங்கள் வைத்திருந்த நபரை கடந்த புதன்கிழமை நீதிமன் றத்தில் பொலிஸார் ஆஜர்ப்படுத்தி னர்.

ஆனைக்கோட்டை 3ஆம் கட்டை யைச் சேர்ந்த சிவஞானம் சதானந் தன் என்பவருக்கே மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் இந்த தண்டனையை விதித்துள்ளார். அபராதம் விதிக்கப் பட்டவர் 10 ஆயிரம் ரூபா செலுத்தி யதுடன் மிகுதித் தொகையைச் செலுத்தும் வரை 50 ஆயிரம் ரூபா கொண்ட இரு ஆள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## பசுக்களின் கருச்சிதைவு நோயை இனம் கண்டு தடுக்க நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பசுக்களில் கருச்சிதைவு (புருசலோசிஸ்) நோய் இனம் காணப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பட்டிகளாக மாடு வளர்ப்பவர்களின் பசுக்கள் குறை மாதக் கன்றுகள் ஈனுவதை தமிழீழபொருண்மிய மேம் பாட்டு நிறுவனத்தின் விலங்கு வேளாண்மைப் பகுதியினரால் இனம் காணப்பட்டு யாழ்ப்பாணம் அரச கால் நடை நோய் புலனாய்வு பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு அண்மையில் பரீட்சார்த்த மாக ஐந்து பட்டிகளில் ஆய்வு செய்து இந்நோய் இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நோய்மிகக்கொடிய நோயாக இருப்பதால் எதிர்காலத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் பரவாமல் தடுக்க கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கையினை மேற்கொண் டுள்ளது. (05)

## விலைகுறைப்பு

(ஒட்டுசுட்டான்)

காராளி செயற்கை முறை சினைப்படுத்தும் நிலையத்தால் விநி யோகிக்கப்பட்ட விந்தின் விநியோக விலை குறைக்கப்பட்டுள்ளது.

பண்ணையாளர்களின் நலன் கருதியும் வேண்டுகோளுக் கிணங்கவும் கடந்த 10.10.2003ல் இருந்து பசு மாட்டிற்கான விந்து விநியோக விலை நூறு ரூபாவில் இருந்துபத்து ரூபாவாகவும், ஆட்டிற் கான விநியோக விலை ஐம்பது ரூபாவிலிருந்துபத்துஆகவும் குறைக் கப்பட்டுள்ளது. என காராளி செயற்கை முறை சினைப்படுத்தும் நிலைய திட்ட இணைப்பாளர் மா.மகாதேவன் தெரிவித்தார். (05)


## 6ஆம் மாத நினைவலைகள்

அன்னை மடியில் 02 - 09 - 1970



ஆண்டவன் அடியில் 06 - 05 - 2003

பிரபல பொறியியலாளர் [மெக்கானிக்]

அமரர்

சண்முகம் பிரபாகரன் (பிரபா)

சம்மளங்குளம் ஒட்டுசுட்டான்

பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் இருப்பிடமாய்
எங்கள் உயிர் கூட்டின்
ஒளிவிளக்காய் நெஞ்சமெல்லாம்
நிறைந்த ஆருயிர் தெய்வமே
நாம் வளரு முன்னம் எமைவிட்டு
எங்கே அப்பா சென்றீர்கள்
எமை நீங்கள் கூட்டி, தம்பி என
மொழியும் பாசத்தை எப்போ காண்போம்?
அம்மாவின் கண்ணீர் ஆறாக ஓடுது
உங்கள் நிழலை பார்க்க முடியாதப்பா
நீங்கள் பகிர்ந்து சென்ற .....!
உயர் சிந்தனைத்தை தடம் பதித்து
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
வேண்டி தொடர்கின்றோம்.
வாழ்வின் பயணத்தை

29.10.2003 நாளை எமது இல்லத்தில் நடைபெறும் 6ஆம் மாத நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

மனைவி தேவரஞ்சினி,
பிள்ளைகள், சுஜித், விஜித்,
டிநோத்.

(3719)


## உலக ஊடக சுதந்திர தரப்படுத்தலில் சிறிலங்கா 87ஆவது இடத்திற்கு வீழ்ச்சி

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் தளத் தைக்கொண்டுள்ள எல்லைகளற்ற ஊடக அமைப்பின் தரநிர்ணயப்படி உலக நிலைஊடக சுதந்திரத்தில் சிறிலங்கா 87ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே சிறிலங்கா 2002ஆம் ஆண்டில் 51ஆவது இடத்தில் தரப் படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கியதேசிய முன்னணி அர சாங்கம் ஊடக சுதந்திர முன் னெடுப்புக்களை மேற்கொண் டுள்ளபோதும் இவ்வாண்டின் சுதந்திரநிலை வீழ்ச்சியடைந்துள் ளது.

இந்தியாவின் ஊடக சுதந்திர நிலை 2002 ஆம் ஆண்டில் 80ஆக இருந்தபோதும் தற்சமயம் அது 128ஆம் நிலைக்கு வீழ்ச்சிய டைந்துள்ளது. பாகிஸ்தானும் 117 ஆம் நிலையில் இருந்து 127ஆம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்கா 135ஆவது இடத்தில் உள்ளது. இஸ்ரேல் 147ஆம் இடத்திற்கு தரப்படுத்தப்பட்டுள்ளது. ஊடக சுதந்திரத்தில் பின்லாந்து முதலாம் இடத்தையும் ஐஸ்லாந்து மற்றும் நெதர்லாந்து ஆகியன இரண்டாம்,மூன்றாம் நிலைகளை யும் வகிக்கின்றன. 2002 ஆம் ஆண்டில் மூன்றாம் இடத்தில் இருந்தநோர்வே இந்த ஆண்டில் நான்காம் இடத்திற்கு தள்ளப் பட்டுள்ளது. (32)

## பருத்தித்துறை முனைப் பகுதியில்-

## இராணுவத்தால் பழிவாங்கப்படுவதைத் தடுக்க நான்கு குடும்பங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

(வடமராட்சி)

படையினரால் பழிவாங்கப்பட லாமென பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப் பாடொன்றையடுத்து பருத்தித்துறை முனைப்பகுதியைச் சேர்ந்த நான்கு குடும்பங்களுக்கு பொலிஸ் பாது காப்பு வழங்கப்பட்டுள்ளது.கடந்த செவ்வாய்க் கிழமையிரவு பருத்தித் துறை முனைப்பகுதியில் படையின ரால் பொதுமக்கள் மீது மேற்கொள் ளப்பட்டதாக்குதல்களையடுத்து அச்சங்காரணமாக இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கே இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நாளன்று படையினரால் முதலில் தாக்கப்பட்டிருந்த மீனவ இளைஞரான பீற்றர்-மாறன் மற்றும் அவருடைய உறவினர்களையுடைய இந் நான்கு குடும்பங்களினதும் சார்பில் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அம்முறைப்பாட்டில் அன்றைய அசம்பாவிதங்களை அடுத்து தாங் கள் தமது வீடுகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ளதாகவும், ஆயினும் அசம்பாவிதங்கள் இடம் பெற்ற காவலரண்களைச் சேர்ந்தபடையினர் தமது வீடுகளில் தம்மை தொடர்ந்து தேடித்திரிவதக்வும் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் தமது வீடுகளில் மீளக்குடியேற தாங்கள் அச்சங் களை கொண்டிருப்பதாக அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டதையடுத்தே இப்பொலிஸ் பாது காப்பு அவர்களுக்கு வழங்கப்பட் டுள்ளது. (27)

## காலபோக நெற்செய்கை கடன் வழங்க ஏற்பாடு

(ஒட்டுசுட்டான்)

காலபோக சிறுபோக நெற் செய்கைகளுக்கு கிராமிய அபிவி ருத்தி வங்கியால் கடன் வழங்கிவ ருகின்றமை தெரிந்ததே. அந்த வகையில் 2003,2004 கால போக நெற்செய்கைக் கடன் கிராமிய அபி விருத்தி வங்கிகளிற்கூடாக வழங் கப்படவுள்ளது.

எனவே கடந்த காலத்தில் கடன் பெற்று மீளச்செலுத்தியவிவசா யிகளும் புதிய விவசாயிகளுக்கும் ஏற்கனவே பெற்று துரிதகதியில் மீளச் செலுத்தி கடன் பெற விரும் பும் விவசாயிகளும் தங்கள் பகுதி கமக்கார அமைப்புக்களில் பெயர் களைப்பதிவு செய்து கொள்ளுமாறு கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது மேலாளர் தெரிவித்துள்ளார். (05)



## சிந்தனைக்கு

நாம் துணிந்து போராடுவோம் சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கின்றது ; வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 28-10-2003

# நடுவர்கள் தேவையில்லை

"போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரின் அறிவுறுத்தல்களையோ அன்றி ஆலோசனைகளையோ முப்படைத் தளபதிகள் கவனத்திற்கொள்ளத் தேவையில்லை" என்ற சனாதிபதி சந்திரிகாவின் பணிப்பானது கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு எதிரானதொரு நடவடிக்கை என்று மட்டும் கொள்ளத்தக்கதொன்றல்ல. இது புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் போர்நிறுத்தத்திற்கும் எதிராகச் செய்யப்பட்டதொரு அறிவிப்பு/பிரகடனம் என்றே கொள்ளத்தக்கதாகும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும், அதன் தலைவரும் புரிந்துணர்வு உடன்பாட்டின் ஒரு பகுதியாகும். உடன்பாட்டின் அடிப்படையிலேயே கண்காணிப்புக்குழுத் தலைவரும் அவருக்குக் கீழ் பணியாற்றும் கண்காணிப்புக்குழுவினரும் நியமிக்கப்பட்டனர். செயலாற்றி வருகின்றனர். இந்தநிலையில் கண்காணிப்புக்குழுத் தலைவரின் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளை கேட்கவேண்டாம் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவுறுத்தியுள்ளமையானது, உடன்பாட்டையே கேள்விக்குள்ளாக்கக்கூடியது என்பது சந்தேகத்திற்கோ, கேள்விக்கோ இடமற்றதொன்று.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு... தொடர்பாக சிங்களப் பேரினவாத சக்திகள் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருவதென்பது புதியதல்லத்தான். ஆனால் சனாதிபதி சந்திரிகா பொறுப்பற்றதனமாக முப்படைத்தளபதிகளுக்கிட்டுள்ள உத்தரவானது இனி யுத்த நிறுத்தத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக முப்படைத்தளபதிகளையும் ஆக்கியுள்ளது எனலாம். அதாவது தமது இஷ்டத்துக்கு ஏற்ற செயற்பாட்டிற்கு அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சில நடவடிக்கைகள் – குறிப்பாக குரங்குபாஞ்சான் விவகாரம் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழீழத் தேசியக்கொடியேற்றுதல் போன்ற விடயங்கள் தமிழ் மக்களையும், விடுதலைப்புலிகளையும் அபிப்பிராய பேதம் கொள்ளவைத்துள்ளது என்பது உண்மையே. ஆனால் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை வெளியேற்றவேண்டுமெனத் தமிழர் தரப்பில் இருந்து கோரிக்கைகள் எழவில்லை.

ஏனெனில், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவை வெளியேறக் கோருவது, அவர்களின் செயற்பாடுகளை முடக்குவது யுத்தநிறுத்த உடன்பாட்டைக் கைவிடுதல் அன்றி முடக்கிவிடுதலுக்கு ஒப்பானதாகும். ஒருவகையில் பார்த்தால் மத்தியஸ்தர் இல்லாத விளையாட்டுப்போட்டி போன்றதாகிவிடும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் இக் கோரிக்கையானது அண்மையில் விடுதலைப்புலிகளின் கப்பல் ஒன்று தப்பிச்சென்றுவிட்டதாகச் சிறிலங்கா கடற்படைத்தரப்பு எழுப்பிய குற்றச்சாட்டுடன் மட்டும் தொடர்புபட்டதொன்றல்ல. சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் நீண்ட நாள் திட்டத்திற்கு இக்கப்பல் விவகாரமானது ஒரு வாய்ப்பாகச் – சந்தர்ப்பமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். ஆகையினால் இக்கப்பல் விவகாரமே இவர்களினால் உருவாக்கப்பட்டதொன்று என்ற சந்தேகத்திற்குக்கூட இடமுண்டு.

சனாதிபதி சந்திரிகா நோர்வே அரசின் சமரச முயற்சிகளுக்கு உடன்பட்டதானது ஏதோ இன்று காணப்படும் ஓர் அரசியற் பொருளாதாரச் சூழ்நிலையில் அல்ல. பொ.ஐ.முன்னணி அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது–சிறிலங்கா பொருளாதாரம் மீள முடியாத நெருக்கடியில்–சர்வதேச சமூகமும் உதவ முன்வராத நிலையில் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு முடங்கிப் போய்விட்டநிலையிலேயே ஆகும். அதாவது அரசாங்கம் செயற்பட முடியாத நிலையில் இருந்தபோதே .

இந்நிலையில், நோர்வே அரசின் சமரச முயற்சி என்பது சனாதிபதி சந்திரிகாவிற்கு ஆறுதல் அளிக்கும் ஒரு விடயம் போன்றதாகவே இருந்தது. இதனால், நோர்வே அரசை மத்தியஸ்தராக/ஏற்பாட்டாளராக சந்திரிகா குமாரதுங்க அழைத்தமையானது நிர்ப்பந்தத்தின் பாற்பட்டதாக இருந்ததே ஒழிய சமாதானத்தின் மீதிருந்த பற்றுதலினாலோ அன்றி அரசியற் தீர்வில் கொண்டிருந்த ஆர்வம்/அக்கறையினாலோ அல்ல.

ஆனால், தற்பொழுது சனாதிபதி சந்திரிகா அதிகாரங்களைக் கொண்டவராக உள்ளார். ஆனால் பொறுப்பற்றவராகவுள்ளார். அதாவது, ஆட்சித் தலைவர் என்ற பெயரைக்கொண்டிருப்பினும் அரசாங்கம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கும் அவர் முகம்கொடுக்கவேண்டியவராக இல்லை. ஆகையினால் பொதுவாகவே சிங்கள அரசியல் வாதிகள்/ஆட்சித் தலைவரிடம் காணப்படும் குணநலனை பிரதிபலிப்பவராகவுள்ளார். அதாவது நடுவர்களும் தமது அணிக்காக விளையாடுதல் வேண்டும். அல்லது நடுவரின் செயற்பாட்டைக் குறைகூறுதல், குற்றம் கண்டுபிடித்தல் என்ற ரீதியில் அவரின் செயற்பாடு உள்ளது.

சனாதிபதி சந்திரிகாவைப்பொறுத்து இன்று அவரின் அரசியல் விளையாட்டிற்கு மத்தியஸ்தர்கள் இடையூறாகவே உள்ளனர். ஆகையினால், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, நோர்வேயின் சமரச முயற்சிகள் யாவும் நிறுத்தப்படவேண்டும். இதற்காக கண்காணிப்புக்குழுத் தலைவரை மட்டுமல்ல நோர்வேத் துவரை கூட வெளியேறுமாறு அவர்கள் கோரத்தயங்கப்போவதில்லை. ஏனெனில் இச்சமாதான ஏற்பாட்டாளர்கள் இருக்கும் வரை நாட்டை யுத்தத்திற்குள் இட்டுச்செல்வதும், நிறைவேற்று அதிகாரத்தை தவறான வழியில் பயன்படுத்துவதும் சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து ஆரோக்கியமானதாக இருக்க மாட்டாது ஆகையினால் இவர்களை வெளியேற்றிவிடுதல் என்பது சனாதிபதியின் எதிர்கால அரசியல் குறிக்கோளில் பெருமளவு முடிவுற்றதாகவே இருக்கும். ஆனால், அது சிறிலங்கா அரசிற்கு ஆரோக்கியமானதாக இருக்கமாட்டாது என்பது பற்றி சனாதிபதிக்கு அக்கறையும் இல்லை/கவலையும் இல்லை.

# ஆயுத மோதல்கள் முடிவுறா நாடுகளின் சமாதான முயற்சிகள் பரஸ்பரம் பரிமாற்றம்

## சமாதானஆர்வலர்கள் பலர் பங்கேற்பு

(கொழும்பு)

ஆயுத மோதல்கள் இடம் பெறும் நாடுகளில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளின் அனுபவங்களை அந் நாடுகளுக்கிடையில் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதன் மூலம் அந் நாடுகளின் தீர்வு முயற்சிக்கு மேலும் வலுவூட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

* சிறிலங்கா, பலஸ்தீனம், இஸ்ரேல், மெக்ஸிக்கோ, வடஅயர்லாந்து, கொரிய தீபகற்பம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் தீர்வு முயற்சிகளின் அனுபவங்களே இவ்வாறு பரிமாறிக் கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேற்படி ஐந்து நாடுகளினதும் ஆயுத மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற சமாதான முயற்சிகளை ஆராயும் சர்வதேச மாநாடொன்று கடந்த வாரம் ஜப்பான் தலைநகரில் நடைபெற்றது. இம் மாநாட்டின் போதே மேற்படி இணக்கப்பாடுகள் காணப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில் மேற்படி ஐந்து நாடுகளிலும்சமாதான முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்துவருகின்ற சுமார் 40 பிரதிநிதிகள் பங்குபற்றினர். அதே நேரம் ஜப்பானைச் சேர்ந்த அறுபது பிரதிநிதிகளும் இம் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து பரிமாற்றத்தில் ஈடுபட்டனர்.

நிவானோ சமாதான மன்றம் ஒழுங்கு செய்திருந்த இம் மாநாட்டின் போது மேற்படி நாடுகளில் ஆயுத மோதல் மற்றும் சமாதான முயற்சிகள் என்பன குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

சிறிலங்காவின் சார்பில் இம் மாநாட்டில் கலாநிதி கொட்பிரி குணதிலக்க, மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு ஜோசவ் திருமதி சிவானந்தினி, துரைசாமி, திருமதி ஜெஸீமா இஸ்மாயின், ஜெகான் பெரேரா, கிங்ஸ்லி ரொட்ரிகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் மா அதிபர் நியமனம் குறித்து அரசியலமைப்பு பேரவை ஆராய ஏற்பாடு

(கொழும்பு)

புதிய பொலிஸ் மா அதிபரொருவரை நியமிப்பது தொடர்பாக இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதற்காக அரசியல் அமைப்பு பேரவை இவ்வார நடுப்பகுதியில் அவசர கூட்டமொன்றை நடத்தவிருக்கிறது.

சேவை மூப்பு அடிப்படையில் புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட வேண்டியவர் யார் என்பது பற்றி பொலிஸ் ஆணைக்குழு அறிவித்ததையடுத்தே இந்தக் கூட்டம் ஏற்பாடாகியிருப்பதாக அரசியலமைப்பு பேரவையின் தலைவர் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தின் போது எடுக்கப்படும் தீர்மானங்கள் சனாதிபதியின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படுமென்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்திற்கு சனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கப்படாது விட்டால் ஏற்படும் நிலை என்ன எனக் கேட்கப்பட்ட போது அவ்வாறான நிலைஉருவானால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட நிலையே உருவாகும். என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மட்டு. மாநகரசபை கட்டடங்களை விட்டு படையினர் முற்றாக வெளியேற வேண்டும்

## மட்டு வரியிறுப்பாளர்சங்கம் வலியுறுத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சொந்தமான கட்டடங்களிலிருந்து ராணுவத்தினர் வெளியேற வேண்டும் என மட்டக்களப்பு மாநகர வரி யிறுப்பாளர் சங்கம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளது.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் அக்கட்டடங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரால் நேரில் சென்று பார்வையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சொந்தமான பிரதான அலுவலகம், நகரசபை மண்டபம், வெபர் விளையாட்டு அரங்கு, விடுதிகள், சிறுவர் பூங்கா, இந்து இளைஞர் மன்ற கட்டடம், வாடிவீடு, அரச நூலகம் ஆகியவற்றில் ராணுவத்தினரும் பொலிசாரும் முகாம்களை அமைத்துள்ளனர்.

இக்கட்டடங்கள் பொதுமக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட கட்டடங்களாகும். போர் நிறுத்த உடன்படிக்கையின் படி இவற்றில் இருந்து ராணுவத்தினர் வெளியேறியிருக்க வேண்டும்.

இவை அதியுயர்பாதுகாப்பு வலயத்தில் இல்லாததுடன் வர்த்தமானிமூலம் பிரகடனப்படுத்தப்படவுமில்லை.

இந்நிலையில் இதனை பார்வையிட்ட கண்காணிப்புக் குழுவினர் மட்டு மாவட்ட ராணுவ உயரதிகாரிகளுடன் இது விடயம் தொடர்பாக பேசி மாநகரசபைக்குரிய கட்டடங்களை பெற்றுத் தருவதாகவும் மாவட்ட மட்டத்தில் உள்ள ராணுவ அதிகாரிகள் இதற்கு இணங்காது விட்டால் இந்த விடயத்தை கொழும்பில் பாதுகாப்பு அமைச்சருடன் பேசி பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாக போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினர் உறுதியளித்துள்ளனர். (32)

# டில்லி ரஞ்சித் கிண்ண அணியில் ஜடேஜா பங்கேற்பு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் அஜய் ஜடேஜா, ரஞ்சித் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான டில்லி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹொங்கொங்கில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சுப்பர் சிக்ஸ் போட்டிகளுக்கான இந்திய அணியில் விளையாடுவதற்கு ஜடேஜாவிற்கு கடந்த புதனன்று நீதிமன்றம் அனுமதியளிக்க மறுத்தது.

இந் நிலையில் டில்லி அணியின் முதலிரு ரஞ்சித் கிண்ணப் போட்டிகளுக்கான அணியில் வெள்ளியன்று ஜடேஜா சேர்க்கப்பட்டார். டில்லி அணியின் முதலாவது போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

நீதிமன்றம் ஆட்சேபிக்காவிடின் ஜடேஜா போட்டிகளில் பங்குபற்றுவதற்கு நாம் குறுக்கே நிற்கமாட்டோம் என்று இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் கூறியுள்ளார்.

# அவுஸ்திரேலியாவுடனான முதல் போட்டியில் 'இந்தியா 36 ஓட்டங்களால் வெற்றி'

இந்திய நியூசிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் மும்முனை கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியில் இந்தியா 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இரவு-பகல் ஆட்டமாக நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 5 விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் 100 ஓட்டங்களையும், வி.வி.எஸ் லக்ஸ்மன் 102 ஓட்டங்களையும், யுவராஜ்சிங் 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிரேக்கன் 53 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 285 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்தில் திறமையாக செயற்பட்ட போதும் இந்திய பந்து வீச்சாளர்களின் திறமையான பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை பறிகொடுத்தது. நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது.

விளையாட்டுச் செய்திகள்

துடுப்பாட்டத்தில் கில்கிறிஸ் 83 ஓட்டங்களையும், ஹெய்டன் 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சகீர்கான் 49 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் கும்ளே, சேவாக் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர். போட்டியில் சிறப்பாட்டக்காரராக சச்சின் டெண்டுல்கர் தெரிவாகினார்.

## - பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் -

# மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொள்ள பெற்றோருக்குப் படையினர் அனுமதி மறுப்பு

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் நேற்று இடம்பெற்ற மாணவர்கௌரவிப்பு நிகழ்வொன்றினில் கலந்துகொள்ளச் சென்ற அம்மாணவர்களது பெற்றோரைப் படையினர்தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப்பரீட்சையில் அதி உயர் சித்தியடைந்த ஏழு மாணவர்களே நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர்.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புகிளை ஏற்பாட்டில் இந்நகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொள்ள வந்த இவ்வேழு மாணவர்களது பெற்றோர்களில் சிலரையே கல்லூரி வீதியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். உரிய முன் அனுமதி பெறப்படவில்லையென தெரிவித்தே அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் பாடசாலை நிர்வாகத்தின் தலையீட்டை அடுத்து நீண்ட தாமதத்தின் பின் நிகழ்வில் கலந்துகொள்ள பெற்றோர் அனுமதிக்கப்பட்டனர். (27)

# அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் பருத். நீதிமன்றத்தால் விடுதலை

வடமராட்சி வடக்கின் இன்பருட்டி கடற்பரப்பில் வைத்து உள்ளூர்மீனவர்களால் பிடிக்கப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் இருவரையும் பருத்தித்துறை நீதிமன்று நேற்று விடுவித்துள்ளது.

அத்துடன் காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அவர்களின் மீன்பிடிப்படகுகள் இரண்டினையும் உபகரணங்களுடன் விடுவிக்கப்படவும் பருத்தித்துறை நீதவான் க.அரியநாயகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட பணிப்புரைகளையடுத்தே துரைராசா மகேந்திரன் மற்றும் திருவோணம் பாலமுருகன் ஆகிய இரு இந்திய மீனவர்களையும் பருத்தித்துறை நீதிமன்று நேற்று விடுவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாத முற்பகுதியில் வடமராட்சி கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை இவர்களிருவருடன் சேர்ந்து பத்து இந்தியமீனவர்கள் உள்ளூர் மீனவர்களால் பிடிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் படகோட்டிகளான இவர்கள் இருவர் தவிர்ந்த ஏனைய எண்மரும் அப்போது விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதவேளை அண்மைக்காலப் பகுதியினுள் குடாநாட்டு கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டவேளை கடற்படையினராலும், உள்ளூர்மீனவர்களாலும் பிடிக்கப்பட்டிருந்த 31 இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் கடற்படைமுகாம்களில் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

மறுபுறத்தே இவ்வாறு அத்துமீறி உட்பிரவேசித்த நான்கு இந்திய மீனவர்களது இழுவைப்படகுகள் யாழ். மேல்நீதிமன்றத்தால் அண்மையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

## அநுராதபுரத்தில் பேரணி ஏற்பாடு

தேசாபிமானிகளின் இரண்டாவது பேரணியும் கூட்டமும் அநுராதபுரத்தில் நடைபெறவிருக்கிறது. இந்தப் பேரணியில் பல தென்னிலங்கை அரசியல்வாதிகள் பங்குகொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை நோர்வே கண்காணிப்புக்குழுத் தலைவரை மட்டுமல்ல அந்த நாட்டின் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அனைவரையுமே நாட்டில் இருந்து வெளியேற்ற வேண்டும் என கிழக்கு மாகாண மக்கள் அமைப்பு சனாதிபதியிடம் கடிதம் மூலம் கேட்டுள்ளது. (32)

# நடைமுறைச் சமாதானத்திற்கு அனைத்துத்தரப்பு ஆதரவும் அவசியம்

**— கூட்டுப் படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற பலகல்ல தெரிவிப்பு**

நடைமுறை சமாதானத்துக்கு நாட்டின் அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டியது அவ்சியமாகும் என கூட்டுப் படைத் தளபதியாக நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்ட இராணுவத் தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார். பதவிப் பொறுப்பேற்பு நிகழ்வில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்துள்ளதாவது. சமாதானத்தின் நடைமுறைகளில் இலங்கையின் அனைத்துப் படைத்தரப்பினரும் தமது ஒத்துழைப்பை வழங்குவதாகக் கூறினர். நாட்டில் 20 வருட யுத்தம் முடிவடைந்து மலர்ந்துள்ள சமாதான சூழ்நிலையை நாட்டின் இறைமைக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் செயற்படுத்தவேண்டியது படையினரின் பொறுப்பாகும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

# க.கா. குழுவுடன் பிரச்சினையில்லை அதன் தலைவருடனேயே பிரச்சினை

## சனாதிபதியின் பேச்சாளர் கூறுகிறார்

(கொழும்பு)

யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழுவுடன் எமக்கு பிரச்சினை ஏதுமில்லை. அதன் தலைவருடன் தான்பிரச்சினை எனக் கூறுகிறார் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ்

களத்தில் நடக்கும் தினசரி நடவடிக்கைகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிராந்திய மட்ட அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் கள உறுப்பினர்கள் ஆகியோருடன் எமக்குள்ள தொடர்புகள் தொடரவே செய்யும் இது உயர் மட்ட அளவிலேயே நடைபெறும் பிரச்சினை ரெலக்சன் தான் படைத்தளபதிகளுடன் தொடர்பு வைத்துள்ளவர் அவரை மாற்றவேண்டுமென் பதுதான் எமது கோரிக்கை என்றும் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## கச்சாய்ப் பகுதி வீடொன்றில்

# எரியுண்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(வல்வை)

சாவகச்சேரி, கச்சாய் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்து எரியுண்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அச்சுவேலிப்பகுதியைச் சேர்ந்தவரென நம்பப்படும் இவ்விளைஞன், கச்சாய் வீதியிலுள்ள தனது நண்பனின் வீட்டிற்கு வந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்தலத்திற்குச் சென்ற சாவகச்சேரி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

சடலத்தை பிரேத பரிசோதனைக் குட்படுத்துவதற்கு ஏதுவாக யாழ். போதனாவைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்றிரவு பொலிஸார் கையளித்துள்ளனர்.

## - அம்பாறை வட்ட மடுப்பிரதேச -

# முஸ்லிம் விவசாயிகளின் நிலைகுறித்து இன்று புலிகள் - முஸ்லிம்கள் ஆராய்வு

அம்பாறை திருக்கோயில் வட்டமடுப்பிரதேச முஸ்லிம் விவசாயிகளின் இடர்பாடு குறித்து இன்று நேரில் ஆராயப்படவுள்ளன. வட்ட மடுப பிரதேசத்துக்கு இன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள், முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகள் ஆகியோர் அப்பிரதேச நிலைப்பாடு குறித்து ஆராயவுள்ளனர். நேற்று முன்தினம் வட்டமடுப் பிரதேசத்திற்கு விவசாயம் செய்வதற்குச் சென்ற முஸ்லிம் விவசாயிகள் தாக்கப்பட்டமை தொடர்பாக நேற்று திருக்கோயில் பிரதேச செயலகத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின்போது இன்று அப்பகுதிக்கு நேரில் சென்று மக்களோடு தொடர்பு கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்சந்திப்பில் கலந்து கொண்ட மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப் பாளர் கௌசல்யன் முஸ்லிம் விவசாயிகள் உள்ளூர் மக்களால் தாக்கப்பட்டமைபற்றி கவலை தெரிவித்துள்ளதோடு இனிமேல் அத்தகைய சம்பவங்கள் நடைபெறாது எனவும் கூறியுள்ளார்.

முஸ்லிம் விவசாயிகள் தங்கள் காணிகள் தொடர்பான சட்டபூர்வமான ஆவணங்கள் வைத்திருப்பின் இப்படியான பிரச்சினைகளுக்கு இடமில்லை என்றும் அவர் கூறினார். எனினும் இதுதொடர்பான ஆவணங்கள் திருக்கோயில் பிரதேச செயலகத்தில் இல்லையென்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். முஸ்லிம் விவசாயிகளின் காணிகள் தொடர்பாக குழுத் தலைவரான ஊதுமான் லெப். வைஉவைஸ் தெரிவிக்கும்போது 2001ஆம் ஆண்டு 417 முஸ்லிம் விவசாயிகள் வட்டமடுப்பிரதேசத்தில் விவசாயம் செய்துவந்ததாகத் தெரிவித்தார்.

1985ஆம் ஆண்டு அரச அதிபரால் வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரம் முஸ்லிம் விவசாயிகளிடம் இருப்பதாகக் கூறிய அவர் இன்று குறிப்பிட்ட இடத்துக்கு ஆவணங்களுடன் முஸ்லிம்களை அழைத்துச் செல்வதாகக்கூறினார்.

## முப்படையினரைக்...

மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளின் சேவைக்காலம் ஆகக் கூடியது 3 வருடத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட பின்னும் அப்பதவிகளில் தொடர்ந்தும் பணியாற்றி ஓய்வு பெறும் 55 வயதுவரை சேவையாற்ற இடமளிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இருவாரங்களுக்கு முன்பு வெளியான அரச வர்த்தமானி அறிவித்தலும் கடற்படை, விமானப் படை அதிகாரிகளுக்கு இவ்வாறான சேவை நீடிப்பை வழங்குகிறது தான் முப்படைகளின் தளபதியாக இருக்கும்போது பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறான வர்த்தமானி அறிவித்தல் விடுவது பொருத்தமாகுமா? என்ற கருத்தை உயர் நீதிமன்றம் விளக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார். மேலும் இவ்வறிவித்தல் மூலம் தமது அதிகாரங்களை மாரட்பன தனது வசமாக்கியுள்ளார் என வும் அவர் சாட்டியுள்ளார். (32)

## நுணாவில்...

ஒப்படைத்து பிரேதப் பரிசோதனை அறிக்கையினைப் பெற்று சமர்ப்பிக்க சாவகச்சேரிப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளபதில் நீதவான். சடலத்தை குறித்த சிப்பாயின் குடும்பத்தவர்களிடம் கையளிக்கவும் உத்தரவிட்டுள்ளார். இதனை பலாலிவிமானப்படை விமானம் மூலம் சடலம் நேற்று மாலையே கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது (27)

## பாக்தாத்..

செஞ்சிலுவைச்சங்க கட்டடத்தையும் நான்கு பொலிஸ் நிலையங்களையுமே இலக்குவைத்துள்ளனர். இது ஈராக்கில் இடம்பெற்ற ஐந்தாவது தற்கொலைத்தாக்குதலாகும் என்று கூறியுள்ளார்.

செஞ்சிலுவைச்சங்க அதிகாரி ஒருவர் இதுபற்றிகூறுகையில் தற்கொலைத்தாக்குதல் நடந்தவுடன் செஞ்சிலுவைச் சங்க கட்டடத்தை நோக்கி தாக்குதலாளர்கள் சரமாரியான துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர் என்றார்.

ஈராக்கின் இடைக்கால நிர்வாகத்தின் அமைச்சர் ஒருவர் கூறுகையில், சில வெளிநாடுகள் ஈராக்கில் தாக்குதல் நடத்துவதற்கு ஆட்களை அனுப்பிவைக்கின்றனர். இது துரதிஷ்டவசமானது. முன்னர் சிரிய நாட்டு கடவுச் சீட்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். எனக் கூறினார்.

## ரெலஸ்சன்...

யிருப்பதற்கு ஹரீம் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இதில் ரெலவ்சனை மீள அழைப்பது தொடர்பான விடயத்தைக் கவனிக்கும் பொறுப்பை நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் வழங்கியிருப்பதாக அவர் கூறியிருந்தார் என ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர், நோர்வேக்குத் திரும்ப வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். சீனக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டமை, கடற்புலிகளுக்கு அங்கீகாரம் வழங்க முயற்சித்தமை என்பவை ரெலவ்சன் மீதான குற்றங்களாகும் என அவர் தெரிவித்தார். (32)

## கடினமாக்க...

க்கை நிராகரிக்கப்பட்டு அவர்களை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் அதிகாரிகளுடன் அவர்கள் ஒத்துழைக்க மறுத்தால் அவர்கள் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள். மேலும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு மேன்முறையீடு செய்வோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் அரசு எண்ணியுள்ளது.

இந்தப் பிரேரணைகள் அடுத்தமாதம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள தஞ்சம் புகுவது குறித்த புதிய மசோதாவில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பாலியல்...

யும், பொலிசாரையும் அகற்ற வேண்டும்'' என்பன போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. சுமார் 7 ஆயிரம் பேரைக் கொண்ட இப்பேரணி மதவாச்சி- மன்னார் வீதியின் வடக்கு-தெற்கு பகுதிகளில் வாழும் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு உயிலங்குளம் பொலிஸ் காவலரணுக்கு முன்பாக நடத்தப்பட்டது.

இதன்போது மேற்படி நான்கு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் மன்னார் அரச அதிபரிடம் வழங்கப்பட்டது. மன் னார் மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகையும் இக்கண்டனப் பேரணியின்போது சமுகமளித்திருந்தார்.

அவர் கருத்துக் கூறும்போது ஏற்கனவே இவ்வாறான வல்லுறவுச் சம்பவம் ஒன்று இப்பகுதியில் நடைபெற்றதாகவும், அந்தச் சோகச் சம்பவம் நடைபெற்று ஒரு சில தினங்களில் மேலும் இவ்வாறான சம்பவம் நடந்திருப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் கூறினார்.

இப்பேரணி மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதற்கு அம்மாவட்ட மாணவர் அமைப்புக்களும், மதசார்பு அமைப்புக்களும் திரளான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

மறியல்போராட்டத்தின் முடிவில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஆகியோருக்கு அப்பகுதி பிரஜைகள் குழுவினரால் அனுப்பி வைக்கப்படுவதற்கான மகஜர்கள் அதி வண.ஆயர் இராயப்பு ஜோசப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, மன்னார் நாடாளுமன்ற உறுப்பினர், மனித உரிமைகள் ஆணைக்குழு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி இரவு உயிலங்குளத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தனது வீட்டில் இருந்த வேளை இரண்டு பொலிசாரினால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது குறித்தும் மீண்டும் 23ஆம் திகதி நான்கு பிள்ளைகளின் தாயாராகிய பெண் ஒருவரை மூன்று பொலிசார் பாலியல் வல்லுறவிற்குட்படுத்த முயன்றது குறித்தும் அந்த மகஜரில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## யாழ்.கண்...

இராணுவத்தினரே இதனைச் செய்திருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆனந்த...

உறுப்பினர்கள் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.